மாகாணத் திறைசேரி – வட மாகாணம்
පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත
**Provincial Treasury – Northern Province**

My No: - NP/09/FRM/2011 Date: - 16.12.2011

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல:- PT/18/2011**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

<u>அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான விசேட முற்பணம்</u>

மேற்படி விடயம் தொடர்பான, பொது நிர்வாக அமைச்சின் 27/2011ம் இலக்கமும் 2011.12.12ம் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்படி சுற்றுநிருபத்திற்கிணங்க, அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு 2012ம் ஆண்டிற்கு விசேட முற்பணமாக ரூபா2500/= வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ் விசேட முற்பணம் 01.01.2012ம் திகதி தொடக்கம் 29.02.2012ம் திகதி வரை மட்டுமே வழங்க முடியும். அத்துடன் இம் முற்பணத்திற்கான 8% வட்டியானது, 10 மாதங்களில் சரி சம மாத வட்டியாக ரூபா9.17 சத வீதம் அறவிடப்படல் வேண்டும்.

இவ் விசேட முற்பணக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பொது நிர்வாக அமைச்சின் 20/2006ம் இலக்கமும் 2006.12.25ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளும் ஏற்புடையதாகும்.

அ.மனோரஞ்சன்
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி
வட மாகாணம்.

A. Manoranjan
Deputy Chief Secretary - Finance
Northern Province

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொது நிர்வாகம் - வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
4. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வுத் திணைக்களம் - வ.மா

} தகவலுக்காக



79/2, Rakka Road, Chundukuli, Jaffna.
Phone No. DCS(F) Direct 021-2220850 General No. - 026-2220854
Fax - 021 - 2220853, E-mail - npctreasury@gmail.com

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 27/2011

எனது இல: EST-7/LOANS/04/0207
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,

2011.12.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம்.

2006.11.25 ஆம் திகதிய 20/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் 2006 ஆம் ஆண்டு குறிப்பிடப்படும் இடங்கள் அனைத்திலும் 2011 ஆம் ஆண்டினைப் பதிலீட்டும், 2007 ஆம் ஆண்டு குறிப்பிடப்படும் இடங்கள் அனைத்திலும் 2012 ஆம் ஆண்டின் பதிலீட்டும், மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 2500 /= இனை விட மேற்படாத தொகையொன்றினை விசேட முற்பணமாக வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. இந்த முற்பணக் கொடுப்பனவானது 2012.01.01 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டு 2012.02.29 ஆம் திகதியன்று முடிவுறுத்தப்படுதல் வேண்டும். 2012.02.29 ஆம் திகதிக்குப் பின்னர் கொடுப்பனவுகளெதுவும் மேற்கொள்ளப்படுதலாகாது.

04. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ. வீ. அபேகோன்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.